DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 46/2015 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கண்ணன் |
| Father's Name | : | வேலுபிள்ளை |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.11.2025

**முதல் விசாரணை:**

1. நான் தேவகோட்டையில் சுப்பிரமணியபுரத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை அழைப்பாணை கொடுத்து நீதிமன்றத்திற்கு வரசொன்னதன் பேரில் நான் வந்துள்ளேன். போலிஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதன் பேரில் சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்).

**குறுக்கு விசாரணை:**

1. கடந்த 19.04.2014 ம் தேதியில் இரவு 11.00 அளவில் ஆட்டோ சவாரி சென்றுவிட்டு, இராம்நகர் சர்ச் ரோடு வழியாக வந்துகொண்டிருந்தபோது புத்துகோவில் அருகில் ஸ்பீட் பிரேக் ஒட்டி TN 63 M 0002 என்ற பதிவெண் கொண்ட இனோவா கார் ஒன்று ரோட்டில் போவோர் வருவோர்க்கு இடஞ்சலாகவும், மறுநாள் ஈஸ்டர் பண்டிகை என்பதால் இருசக்கர வாகனங்கள் சர்ச் பக்கம் செல்லமுடியாமலும் இருந்த சமயத்தில் பணியில் இருந்த நகர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வளார் ஆசிர்வாதம் என்பவர்,

மேற்படி காரை நிறுத்திவிட்டு, பிளக்ஸ்போர்டு வைத்துக்கொண்டிருந்த அலகாபுரிநகர் காசிநாதன் மகன் விஜய் என்பவரிடம் சர்ச்–க்கு செல்பவர்களுக்கு இடையூறு இல்லாமல் காரை ஓரமாக நிறுத்திவிட்டு நோட்டீஸ் ஒட்டவேண்டியதானே என்று கேட்டதற்கு மேற்படி விஜய் என்பவர் சிறப்பு சார்பு ஆய்வாளரை பணி செய்யவிடாமலும், அவரை பார்த்து நீ என்னடா என்னை கேட்பதற்கு பெரிய இவனா என்று அசிங்கமான வார்த்தையால் பேசினார் என்றும், இப்போது உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லி மேற்படி விஜய் காரை எடுத்து ஆசிர்வாதம் மீது மோதி கொல்லப் பார்த்தார் என்றும், பிறகு ஆசிர்வாதம் செல்போனை எடுத்து மேல்அதிகாரிக்கு தகவல் சொல்லும்போது உடனே விஜய் காரை விட்டு கீழே இறங்கி போனை பிடுங்கி அவர் நெற்றியில் அடித்தவுடன் இடது கண் ஓரத்தில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், நானும் அங்கு நின்றவரும் சத்தம் போடவும் விஜய் காரை எடுத்துக்கொண்டு போய் விட்டார் என்று போலிஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கின் ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.